## பத்திரிக்கைச் செய்தி

## புதிய மின் இணைப்பிற்காக புகார்தாரரிடம் ரூ.15,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வணிக ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.வெங்கடாசலம், சீலப்பந்தல் மதுரா மோட்டூர் கிராமமம், குளக்கரைவாடி அஞ்சல் திருவண்ணாமலை மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருகிறார். இவருக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். இவர் தன்னுடைய சொத்தினை பாகப்பிரிவினை செய்து பிள்ளைகளுக்கு கொடுத்துள்ளார். இவருடைய இளைய மகன் திரு.கார்த்தி தன்னுடைய நிலத்தில் புதிதாக வீடு கட்டியுள்ளார். கடந்த 21.03.2023ம் தேதி வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மல்லவாடி இளநிலை பொறியாளர் அலுவலகத்தை அணுகியுள்ளார். அப்போது அங்கு பணியிலிருந்த திருமதி.தேவி வணிக ஆய்வாளர் அவர்கள் புகார்தாரர் கொண்டு சென்ற அனைத்து ஆவணங்களையும் பெற்றுக் கொண்டு மேற்படி மின் இணைப்பிற்காக தனக்கு ரூ.16,000/- கொடுங்கள் என கேட்டுள்ளார். 24.03.2023ம் தேதி வணிக ஆய்வாளர் தன்னுடைய உதவியாளருடன் சென்று புகார்தாரரின் இளைய மகனின் வீட்டை பார்வையிட்டுள்ளார். பின் 27.03.2023ம் தன்னுடைய இளைய மகனுடன் சென்று திருமதி.தேவி வணிக ஆய்வாளர் அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து தன்னால் ரூ.16,000/- தர இயலாது எனவும், மின் இணைப்பிற்கான டெபாசிட் தொகை ரூ.5,000/- மட்டும் தானே என கேட்டுள்ளார். அதற்கு திருமதி.தேவி, டெபாசிட் தொகை ரூ.5,000/- மட்டும் தான் மீதமுள்ள தொகை ரூ.11,000/- தனக்கும் தன்னுடைய மேல் அதிகாரிகளுக்கும் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கூறியுள்ளார். பின் லஞ்ச தொகையினை ரூ11,000/-லிருந்து ரூ.10,000/-மாக குறைத்து கொடுக்க வேண்டும் என கூறி அப்படி கொடுக்காவிட்டால் மின் இணைப்பு கொடுக்க இயலாது என கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவண்ணாமலை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் மேல் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்று 29.03.2023 திருமதி.தேவி, வணிக ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.15,000/-யை (மின் இணைப்பிற்கான டெபாசிட் தொகை ரூ.5,000/- மற்றும் லஞ்ச பணம் ரூ.10,000/-) புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.